பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் ; தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) நிலக் கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1992) ; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1992) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தர தாஸ் :

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூதான மூமென்டைப் பொறுத்தவரையில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன். ஆச்சாரிய வினோபாபாவேயினுடைய நாமினியே தேவையில்லாமல் நாமே நடத்தப் போவதாக 'ஆப்ஜெக்ட் ரிஜிஸ்ட'ரிலே சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையினால், இதை ஒரு செலக்ட் கமிட்டியை விட்டு, பழங்காலத்திலே இருந்து இருக்கிற ஒரு சட்டம்; இதை மாற்ற வேண்டுமென்று சொல்லும் போது, செலக்ட் கமிட்டியைப் போட்டு, கேட்பது நல்லது என்று நினைக்கிறேன். மேலும், செலக்ட் கமிட்டியைப் போடவில்லை என்றாலுங்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நல்ல முறையிலே, அதற்குப் பதிலாக நல்ல அதிகாரிகளை விட்டு, இந்த மூவ்மென்டினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும்; எந்த ஒரு கெடுதலும் அதற்கு வரக்கூடாது என்ற வகையிலே இந்த சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். நன்றி; வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துக்களைச் சொல்கிறபோது, இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று சொன்னார்கள். பொறுக்குக் கமிட்டிக்கு விடுகிறபோது, ஏதாவது சட்டமுன் வடிவு வருகிறபோது, அதிலே மாறுபட்ட கருத்து வருகிற போது, அது சமுதாயத்திற்கு நலம் பயக்கும் என்று ஆளுங் கட்சி கொண்டு வருகிற நேரத்திலே, இதிலே சில சந்தேகங்கள்

@24-9-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) 1992 ஏப்ரல் 27

வரலாம். அந்த நேரத்தில், அதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடுவது நியாயம்தான். இது அப்படிப்பட்ட ஒன்று அல்ல. இதிலே என்னவென்றால், ஒரு வாரியம் அமைக்க வேண்டு மென்றால், ஆச்சாரிய வினோபாபாவே ஒன்றைச் சொல்லி யிருக்கிறார்கள். அவர்கள் இங்கே தமிழ்நாட்டிற்கு வந்த போது, நிலங்கள் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பூமிதான இயக்கத்திற்காக 24 ஆயிரம் ஏக்கரா கொடுக்கப் பட்டிருக்கிறது. கிராம தானத்திற்கு 2049 கிராமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த கிராம தானத்தில் 1,50,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதைப் பராமரிப்பு செய்வதற்கு அரசுக்கு ரூ. 60 ஆயிரம் கொடுக்கப்பட்டிருக் கிறது. இது, முன்பெல்லாம் அவர் உயிரோடு இருந்தபோது, அந்த வாரியம் அமைத்து, அந்த வாரியத்தை அமைக்கிற பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இன்றைக்கு அவர் இல்லை. ஆனால், இன்றைக்கு அவருடைய பிரதி நிதிகள் மகாராஷ்டிரா மாநிலத்தில் சர்வ சேவா சங்கம் இருக்கிறது; அந்த சர்வ சேவா சங்கத்திலே யாரோ இருப் பார்கள். ஆனால், அவர்களுடைய அனுமதியைப் பெற்று வாரியத்தை அமைத்து, அதை எப்படி நடைமுறைப்படுத்து வது என்பதில் காலதாமதம் ஆகிவிடும். வினோபாபாவே எந்த நோக்கத்திற்காக எந்த எண்ணத்திற்காக நிலத்தை வாங்கினார்களோ, அதைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக வாரியம் அமைக்கப்பட போகிறது. அந்த வாரியம் அமைக்கிற பொறுப்பை, அதிகாரத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறதே தவிர, வேறு எந்த மாற்றமும் இல்லை.

அதிலே அவர் எந்தச் சட்டத்திற்குட்பட்டு, எந்த நியாயத்திற்கு உட்பட்டு அந்த நிலத்தை எடுத்தார்களோ, எப்படிக் கொடுக்க வேண்டுமென்று எழுதி வைத்திருக் கிறார்களோ அது எதையும் மாற்றவும் இல்லை. மாற்றவும் முடியாது. மாற்றுவதற்கு இந்த அரசு விரும்பவும் இல்லை. ஆனால் இந்த வாரியத்தைய அமைக்கிறபோது வினோபாபா வேவோ அல்லது அவரால் நியமிக்கப்படுகிற ஒருவருடைய அனுமதி பெற்று என்பதை மாற்றி இந்த அரசு எடுத்துக் கொள்கிறது என்று சொல்லி, வேறு ஒன்றும் இல்லை என்று சொல்லி, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-20

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடி விற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக் கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

(பேரவைத் தலைவர்) 1992 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்'. என்க (ஆம்)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1992).

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 17/1992) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது எம். ஜி. ஆர். மெடிக்கல் யூனிவர்சிடி அட்மிஷனைப் பற்றி உள்ள விவரங்களைத்தான் இந்த மசோதாவில் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனுடைய 'எர்லியர் ஆக்ட்' முன்னாலே என்ன நடந்திருக்கிறது என்ற விவரங்கள் இதிலே